## நாணயச் சபை

## இலங்கை மத்திய வங்கி

**2018 மாச்சு 14** **வங்கித்தொழில் சட்டக் கட்டளை** **2018இன் 01ஆம் இலக்கம்**

---

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை.

1. எடுத்துக்காட்டல்

இக்கட்டளையானது 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளையென எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 07ஆம் திகதி விடுக்கப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) 2000ஆம் ஆண்டுக் கட்டளையின் கிளைவாசகம் 5இற்கான திருத்தம்

2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் திகதியிடப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) 2000ஆம் ஆண்டுக் கட்டளையின் கிளை வாசகம் 5 இற்கு பதிலீடாக பின்வரும் புதிய கிளைவாசகம் புகுத்தப்படுகிறது.

**வதிவற்றோர் கணக்கொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்கள்**

5. கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் வதிவற்றோரினால் பேணப்படும் கணக்கொன்றில் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலும் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:

(அ) உள்முகப் பணவனுப்பல்களை வரவு வைத்தல்; அத்துடன்

(ஆ) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் விடயத்தினைப் பொறுத்து வரவு வைக்கலாம் அல்லது பற்று வைக்கலாம்.

3. இரத்துச் செய்தல்

பின்வருவன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன:

(i) 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை.

(ii) 2011ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்